Registered as a NewsPaper  பக்கங்கள் 06  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03  திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 21 ( 03 - 05 - 1992 ) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 75

## பல்கலை அனுமதி கைநூல் வெளியாகியது

கல்வியாண்டு 1991-92 பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பிரமாணங்களும் அறிவுறுத்தல்களும் அடங்கிய கைநூல் ஒன்றைப் பல்கலைக்கழகங்கள் மானியக்குழு வெளியிட்டுள்ளது இந்நூலின் பிரதிகள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கொள்கை விளக்கம், அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமைகள் பாடப்புலம், கற்கை நெறிதொடர்பான விடயங்கள் [6 ஆம் பக்கம் பார்க்க]

### ◎ ஆட்கடத்தல் ◎ கொலை ◎ கொள்ளை

# முஸ்லிம் ஆயுத கும்பல்களால் மட்டக்களப்பில் பதற்ற நிலை

## தமிழர்கள் காடுகளில் தஞ்சம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் ஆயுதக் கும்பல்களின் அடாவடித்தனங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதால் இப் பகுதியில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பெரும் பதற்ற நிலை உருவாகியுள்ளதாக இங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. ஆயுதம் தாங்கிய முஸ்லிம் காடையர்களும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் ஆட்கடத்தல், கொலை, கொள்ளை போன்ற வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுவருவதால் தமிழ் மக்கள் வெளியில் நடமாட அஞ்சுகின்றனர் என்றும் பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் காடுகளில் தஞ்சம் அடைந்து இருப்பதாகவும் இச் செய்திகள் மேலும் கூறுகின்றன.

அண்மைக் காலத்தில் மட்டக்களப்பில் முஸ்லிம் ஊர்காவற் படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன. தமிழர்களைக் கடத்துதல், காணாமற் போதல், படுகொலை செய்தல், அவர்களின் பொருட்களைச் சூறையாடுதல் என்பனவற்றின்காரணமாக முஸ்லிம்-தமிழ் மக்களிடையில் பதற்ற நிலை அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இவ் அடாவடித்தனங்களில் ஈடுபட்ட முஸ்லிம் ஆயுதக் கும்பல்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவியும் வந்தனர். முஸ்லிம் ஊர்காவற் படையினருக்கு மட்டுமல்ல முஸ்லிம் கிராமவாசிகளுக்கும் ஜிகாத் இயக்கத்தினருக்கும் இராணுவத்தினர் உதவி வழங்கி வந்தனர்.

கிழக்கில் முஸ்லிம் ஊர்காவற்படையின் அடாவடித்தனங்கள் பற்றி அண்மையில் சிறிலங்கா பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப் பட்டது ஆனால் முஸ்லிம் ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அரசா [6 ஆம் பக்கம் பார்க்க]

## தென் தமிழீழத்தில் மேதின எழுச்சிப் பேரணி கெடுபிடி மத்தியில் சாதனை

தென் தமிழீழத்தில் மாபெரும் மே தின எழுச்சிப்பேரணிகளும், கூட்டங்களும் தமிழ் மக்களால் நடாத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோவில்போரதீவு, அரசடித்தீவு, பன்னன்குடா ஆகிய மூன்று இடங்களில் ஆரம்ப [6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ்குழுக்கள் உதவியுடன் கொழும்பில் 20 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இருபது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மேதினத்தைக் குழப்பப் புலிகளால் அனுப்பப்பட்டிருக்கலாம் என்று அரசு தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இவர்களைக் கைது செய்யக் கொழும்பில் நிலைகொண்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் பொலிசுக்கு உதவியதாகக் கூறப்படுகிறது.

## காத்திரமான தீர்வை புலிகள் ஏற்றுக் கொள்வர்

### அஸாஹிதேரர் பி.பி.சிக்கு தெரிவிப்பு

(லண்டன்)

எமது தீர்வுத்திட்டத்தைப் புலிகள் நிராகரித்தபோதிலும் அத்திட்டத்திலுள்ளதை விட அதிகாரம்கூடிய காத்திரமான அம்சங்களைக்கொண்ட தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டால் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளத் தயாரெனக் கூறியுள்ளனர். இவ்வாறு அண்மையில் யாழ். விஜயம்செய்த பௌத்த நல்லெண்ணத்தூதுக் குழுவில் அங்கம்வகித்த வண. [6 ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டின்மீது தாக்குதல் 'ஏசியா வாச்' விசனம்

(வாஷிங்டன்)

யாழ். குடாநாட்டின் மீது அரசாங்கப் படைகள் தாக்குதல் நடத்தும் சாத்தியப்பாடு குறித்து அமெரிக்க மனித உரிமைகள் குழுவான 'ஏசியா வாச்' விசனம் கொண்டிருப்பதாக தெரிய வருகிறது.

வாஷிங்டனை மையமாகக் கொண்டியங்கும் இந்தமனித உரிமைக் குழு கடந்த ஞாயிறன்று வெளியிட்ட அறிக்கையொன்றில் மேலும்,

குடிமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை நோக்கி அண் மூடித்தனமான வகையில் வகை தொகையின்றி விமா [6 ஆம் பக்கம் பார்க்க]

## ஆயுதம் தாங்கிய முஸ்லிம்களே தமிழ்க் கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தினர்

• பி. பி. சி. தகவல்

(கொழும்பு)

கிழக்கில் முத்துக்கல மற்றும் தமிழ் கிராமங்களில் தமிழர்களின் வீடுகளையும் உடமைகளையும் ஐம்பதுக்கும் அதிகமான ஆயுதந்தாங்கிய முஸ்லிம்களே தாக்குதல் நடத்தியதாக நம்பத் தகுந்த வட்டாரங்களை ஆதாரம் காட்டி நேற்றிரவு பி.பி.சி. சிங்களச் சேவை தெரிவித்தது.

இவர்கள் பொலிஸ் பயிற்சி [6 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவம் கைது செய்த 16 தமிழரைக் காணவில்லை

(கொழும்பு)

கிழக்கில் தமிழ்க் கிராமங்களிலிருந்து இராணுவத்தினரால் கைது செய்து அழைத்துச்செல்லப்பட்டவர்கள் பலர் கொல்லப்பட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமையன்று நடந்த வன்செயல்களை அடுத்து இவர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமமொன்றிலிருந்து 40 பேர் வீடுகளிலிருந்து அழைத்துச்செல்லப்பட்டார்கள். இவர்களில் 21 பேர் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். 16 பேர் என்னவானார்கள் என்றும் தெரியவில்லை. இவ்வாறு இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்களில் 3பேரின் சடலங்கள் காடுகளில் கிடந்தன என்றும் தெரிவிக்கப் [6 ஆம் பக்கம் பார்க்க]

## மண்ணின் விடுதலை என்பது வெறும் எல்லைபோடுவதல்ல

-புதுவை இரத்தினதுரை

அன்னை பூமியில் நாம் ஆடுவதையும் பாடுவதையும் நிறுத்த மாட்டோம் குண்டு விழ விழக் குடியிருப்போம் என நேற்று மாலை நல்லூரில் நடைபெற்ற தமிழிசை விழாவில் கலந்து கொண்டு தொடக்கவுரை நிகழ்த்திய கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை குறிப்பிட்டார். ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இத்தமிழிசை விழாவில் அவர் தொடர்ந்துஉரை நிகழ்த்துகையில் குருதி சிந்தியேனும் அடுத்த தலைமுறை நிம்மதியாகவாழநாம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தே தீருவோம். இன்றுவரை இங்கேயே இருந்து இந்த மண்ணை நேசிப்பவர்களை நாங்கள் கௌரவிக்கிறோம். அவர்களைப் பூசிக்கிறோம்.

நாம் இந்த மண்ணில் வாழ்வதாயின் எல்லோரும் சேர்ந்து வாழ்வோம். இன்றேல் விடுதலைத் தீயில் அழிய நேர்ந்தாலும் அனைவரும் சேர்ந்தே அழிவோம்.

நாம் பாடுவதும், ஆடுவதும் வெறும் ரம்மியமானதுமல்ல, [6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழிசை விழா நிகழ்வுகள் சிறப்புற ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் தமிழீழக் கலைஞர்களை ஒன்றிணைத்து நடாத்தும் தமிழிசை விழா நேற்று மாலை ஆறுமணிக்கு நல்லூரில் ஆரம்பமானது. நாதஸ்வர இசைக் கச்சேரியுடன் ஆரம்பமான இவ் விழாவில் பல ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

வீதிகள் தோறும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு நல்லூரே விழாக் கோலம் பூண்டிருந்தது.

தமிழீழ இசைக்கலைஞர் [6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

மணியம்ஸ் கட்டிடத்தில் தேசிய கூட்டுறவு சபையால் பாவிக்கப்பட்ட 3500 சதுர அடி கட்டிடத்தில் இரண்டாவது மாடி வாடகைக்கு விடப்படும் காரியாலயப்பாவிப்புக்கு உகந்தது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, மணியம்ஸ் ரெக்ஸ் ரைல்ஸ், NO, 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
( 2522 )

### தவறிவிட்டது

மேதினத்தன்று காங்கேசன் துறை வீதியில் திறப்புக் கோர்வை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'இளந்தென்றல் படப்பிடிப்பாளர்' கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சேர்ப்பிக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(சி/4358)

### காணவில்லை

1. 5. 1992அன்று மேதின ஊர்வலத்தில் வந்தபோது அப்புத்துரை தங்கத்துரை, முருகேஸ் அன்னமலர் ஆகிய அடையாள அட்டைகள் நீர்வேலிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் காணமல் போய் விட்டது கண்டெடுத்தவர்கள் ராசலிங்கம் சன சமூக நிலையம் உடுப்பிட்டியில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம். ( 2528 )


# தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழ்மக்கள் அணிதிரண்டு உள்ளனர்

## மேதினம் வெளிப்படுத்துவது இதுவே- பரா

ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைக்காக போராடி வெற்றி பெற்ற இம் மே நாளை நாமும் பல அடக்கு முறைகள் எதிரியால் போடப்பட்டிருந்த இவ்வேளையில் இவற்றையெல்லாம் எதிர் கொண்டு எமது தமிழ் மக்கள் இன்று ஒரே தலைமையில் தலைவர் பிரபாகரன் கீழ் அணிதிரண்டு நிற்பதை இந்த மேதினம் எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு மருத்துவ பீட மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்

எதிரியானவன் பொருளாதாரத் தடையையும், இராணுவ நெருக்குதல்களையும் அப்பாவி மக்களை அழிப்பதையும் மேற்கொள்வதன் மூலம் தமிழர்கள் அடங்கிவிடுவார்கள் போராட்டத்திற்கு, விடுதலைப் புலிகளுக்கெதிராக கிளர்ந்தெழுவார்கள் என நினைத்த சிங்கள அரசிற்கு எமது மக்கள் நீங்கள் எத்தடையை போட்டாலும் நாம் பயப்படமாட்டோம். இது எங்களுடைய சொந்த மண் இதை நாம் மீட்டெடுக்க அணிதிரண்டு விட்டோம், என்பதையும், விடுதலைப் புலிகள் வேறு மக்கள் வேறு என்ற நிலை இல்லை என்பதையும் இன்றைய மேதினம் எடுத்துக்காட்டுகிறது என்றார்.

எமது பலமானது எவ்வளவு தளராத உறுதியாக இருக்கிறதோ அந்தளவுக்கு எங்களுடைய வெற்றியும் நிச்சயமாக இருக்கும். இன்று இங்கே உழைக்கும் மக்களுக்கு பெரும் பழு சுமத்தப்பட்டிருக்கிறது. ஆண்டாண்டு காலம் தொழில் புரிந்து வந்த எம்மக்களின் கடற்றொழில், விவசாயத் தொழில், தொழிற்சாலைகள் மூடப்பட்டமை, திட்டமிட்டு அரசு மேற்கொண்ட சதி நடவடிக்கைகளாகும். இவை ஒவ்வொன்றையும் எமது உழைக்கும் மக்கள் எதிர் கொண்டே வாழ்கின்றனர். இப்படி செய்வதன் மூலம் எமது உழைக்கும் சக்தியை போராட்டத்திலிருந்து அன்னியப்படுத்தலாம் என்று அரசு பகல்கனவு காண்கிறது.

இன்று எமது மக்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காவே அரசினால் துன்புறுத்தப் படுகிறார்கள். வடக்கு கிழக்கில் மட்டுமன்றி மலையகத்தில் வாழும் தமிழர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மலையகத்தில் வாழ்கின்ற எமது தமிழ்மக்கள் சாதாரண லயன்களிலே யே இன்றும் வாழ்கின்றனர். இவர்களுக்கான உழைப்பிற்கேற்றஊதியம் இல்லை 20ஆம் நூற்றாண்டின் அடிமைகளாக இம் மக்கள் இன்றும் வாழ்கின்றனர். அம்மக்களும் இன்று அரசின் அடக்குமுறைகளை உணரத் தொடங்கியுள்ளனர். போராட்டங்கள் ஆங்காங்கு வெடிப்பதையும் நாம் அறிவோம்.

இன்று தென் தமிழீழத்தில் பரம்பரை பரம்பரையாக தமிழ்மக்கள் வாழ்ந்த பிரதேசத்தை நாளுக்குநாள் சிங்கள இனவெறியரசு பறித்துக் கொண்டிருக்கிறது. எம்மக்கள் சொல்லொண்ணாத்துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். எமது கடல்பகுதியில் உள்ள வளம் தரையில் உள்ள வளம் யாவும் அரசு திட்டமிட்டு அழித்துக் கொண்டிருக்கிறது இவை எல்லாவற்றையும் நாம் தடுத்து நிறுத்த வேண்டும். எமது மண்ணை மீட்டெடுக்க உறுதிமிக்க எமது தலைவர் பிரபாகரனின் அணியில் அணிதிரண்டு சகல ஒடுக்குமுறைகளையும் உடைத்தெறிந்து எமது தமிழ் சமூகம் சுதந்திரக்காற்றை சுவாசிக்க இம்மேநாளில் திடசங்கற்பம் பூணுவோம். உறுதியும் ஒற்றுமையும் பலமும் எம்மிடம் இருக்கும்வரை எங்களை யாரும் ஒன்றும் செய்யமுடியாதென்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவோம் எனவும் தனதுரையில் குறிப்பிட்டார்.

## இடதுசாரி தலைவர்களைக் கொல்லச் சதியாம்

### - கூட்டறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இடதுசாரி கட்சிகளின் தலைவர்களை கொலை செய்வதற்கான சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதாக நம்பகமான தகவல்கள் தமக்கு கிடைக்கப்பெற்றிருப்பதாக மூன்று இடதுசாரிக் கட்சிகள் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா சமசமாஜ கட்சி பொதுச் செயலாளர் பேர்னாட் சொய்சா, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் கே. பி. சில்வா, சிறிலங்கா மக்கள் கட்சி பொதுச் செயலாளர் வை. பி. டி. சில்வா ஆகியோர் கைச்சாத்திட்டு கூட்டாக இவ் அறிக்கையை விடுத்துள்ளனர்.

தற்போதைய அரசியல் நிகழ்வுகளை கருத்திற் கொண்டு நோக்கும்போது இடைக்கப் பெற்ற தகவல்கள் வாயிலாக அம்பலபபடுத்தப்பட்டிருக்கும் கொலைச் சதித்திட்டத்தினால் வேறு பல அரசியல் கட்சிகள் அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கின்றன என்ற முடிவுக்கு வர முடிகிறது.

இந்த அச்சுறுத்தலின் பின்னணியில் இருக்கும் சக்திகள் பற்றிய எமது மதிப்பீட்டின் படி இச் சதித்திட்டத்தை பொதுமக்களுக்கு தெரியப் படுத்த வேண்டுமென்று ஆழ்ந்த பரிசிலணையின் பின்னரே நாம் முடிவுக்கு வந்துள்ளோம் என்றும் அக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்டத்திற்கும் விவசாய கடனுதவி

(கொழும்பு)

விவசாய புனர்வாழ்வு செயற்திட்ட கொடுகடன் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட மக்களுக்கும் கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கென இவ் விவசாய கொடுகடன் உதவிகள் வழங்கப்படும். இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளினூடாக இப்பிரதேசங்களில் வாழும் பாதிப்படைந்த மக்கள் பின்வரும் முயற்சிகளுக்காக கடனுதவி பெற்றுக் கொள்ளலாம். குறுகியகாலப் பயிர்ச் செய்கைகள், வாழை, கரும்பு, மரமுந்திரிகை, தோட்டப் பயிர்கள், நிரந்தர பயிர்கள் செய்கை பண்ணல் மாடு, கோழி, பன்றி, ஆடு, வாத்து போன்றகால்நடைகள் வளர்த்தல், மரப்படகுகள் பைப்பர் கிளாஸ், படகுகள் வாங்குதல், டீசல்என்சின்வாங்குதல், மீனவ உபகரணங்கள், வாங்குதல், உதிரிப்பாகங்கள்தோணிகள் கொள்வனவு செய்தல், தெளிகருவி வாங்குதல், உழவு இயந்திரம் விவசாயம் சம்பந்தமான உபகரணங்கள், அறுவடை இயந்திரம் மற்றும் நெல் குற்றும் இயந்திரம். மீன் பதனிடும் தொழில், தும்புத் தொழில், தேனீ வளர்ப்பு, மரவள்ளிமா தயாரித்தலுக்கான இயந்திரம், மரமரிதலுக்கான இயந்திரம் போன்ற கிராமிய கைத்தொழில்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கடன்கள்வழங்கப்படவுள்ளன.

## உடற்பயிற்சி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான உடற்பயிற்சிக் கருத்தரங்கு மே 4 முதல் 8 ஆம் திகதி வரை கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் அனைவரும் நாளை 4ஆம் திகதி காலை கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு வருகை தருமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் கேட்டுள்ளார்.

## தொண்டர் ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் தமது சுய விபரப் படிவங்களைத் தொண்டர் ஆசிரியர் சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றது. இப் படிவங்கள் நாளையும் நாளை மறுதினமும் ஏற்றுக்கொள்ளப் படஉள்ளது. இதுவே இவ்விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை யாழ். தொண்டர் ஆசிரியர் சங்கமும், கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர் சங்கமும் இணைந்து செயற்படுவதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## உற்பத்தி எழுச்சி வாரப்போட்டிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்தி எழுச்சி வாரத்தை ஒட்டி முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் கடந்த 22 -ம் 24 -ம் திகதிகளில் குட்டான் இழைத்தல், கிடுகு இழைத்தல், பனை ஏறுதல், மாவட்ட மட்டத்திலான நீச்சல் போட்டி, வண்டில் சவாரி ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டன.




## கம்ப்யூட்டர் கல்வி

* DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE
* dBASE III +
* LOTUS 1-2-3
* WORD STAR 5.5 (புதிய வெளியீடு)

ஆரம்பம் :

04 - 05 - 92 [ திங்கள், புதன்
08 - 05 - 92 வெள்ளி வகுப்புக்கள் ]
09 - 05 - 92(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

மேலதிக விபரங்களுக்கு:

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்

சதாபொண்ஸ் அல்வாய் கிழக்கு, அல்வாய். | 37, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(சி/4357)



## நினைவு கூருகின்றோம்...

1992-05-03

1988-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

விக்கி (ஐயாத்துரை பிரபாகரன் வந்தாறுமூலை, மட்டக்களப்பு).

தமிழீழக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய.

ஜெகன் (கோவிந்தசாமி தெய்வேந்திரன் ஊறணி, வல்வெட்டித்துறை)

1989 -ம் ஆண்டு கிளிநொச்சியில் தேச விரோத சக்திகளினால், குத்தியும், சுட்டும் கொல்லப்பட்ட அதேபகுதிப்பிரஜைகள் குழுப்பொருளாளர்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/4356)

# தேனார் அமுதச் சொற்கள் செவிவழி புகுந்திடுக

வீரன் ஒருவன் போர்க்களத்தில் நெஞ்சில் புண் பட்டுக் கிடக்கிறான். அப்புண்ணை உண்ணப் பேய்கள் வருகின்றன. அப்பேய்களைக் கலைக்க யாழும் குழலும் கொண்டு காஞ்சிப் பண்ணை இசைக்கத் தன் தோழியைத் தலைவி கூப்பிடுகிறாள். இப்படி ஒரு செய்தி புறநானூற்றில் வருகிறது. வீரம் விளைக்கவும், துன்பம் துடைக்கவும் பேரா இன்பம் பெறவும் இசையைத் தமிழ்மக்கள் காலம் கடந்த காலந் தொடக்கம் பயன் படுத்தியிருக்கிறார்கள். இசையின் பன்முகப்பட்ட பயன் பாட்டையும், தன் நிகரில்லாப் பெருமையையும் தெரிந்தே முத்தமிழ் என்று வகைப்படுத்திய சான்றோர் இசைத்தமிழை நடுவண் வைத்து, இசைத்தமிழால், இயற்றமிழும் நாடகத் தமிழும் பெருமை பெறுகின்றன என்ற கருத்தை நயத்தக்க முறையில் நிறுத்தினர்.

இசையால் இறைவனையும் வென்றனர் என்ற கதைகள் ஒருபுறமிருக்க, இசையால் 'புண்' உண்ணவரும் கொடிய பறவைகளையும், நரிகளையும் ஆறலை கள்வர்களையும் அணுகவொட்டாது துரத்திய செய்திகளும் தமிழர்களுக்குப் புதியனவல்ல. இசைவல்ல பாணர்களையும், பாடினிகளையும் ஆதரித்து ''வாடாத் தாமரை'' சூடிய மன்னர்களையும், இசையினால் கவரப்பட்டு, இசைவாணர்கள் விடுதல் அறியா விருப்பினராகி, பரிசில் பெற்றுவிட்டால் மன்னனைப் பிரிய வேண்டி வருமே என்று நினைந்து அது பெறாது மன்னன் பதியில் பாணர்கள் வாழ்ந்தார்கள் என்பதை:

''யானே பெறுக அவன் தாள் நிழல் வாழ்க்கை அவனே பெறுகஎன் நாவிசை நுவறல்'' என்றும் புறம்'' பேசக்காண்கின்றோம்.

இந்த இசைக்கு என்ன நடந்தது? என்று கேட்கத் தோன்றுகிறதே! களப்பிரர் கால ஆட்சியால் தமிழர் கலைகள் நலிந்ததும், மெலிந்ததும்மெய்மையே. தொடர்ந்து வந்த பல்லவர்களும் நாயன்மார் ஆழ்வார்கள் காலம் வரை வடவர் கலைகளுக்கே வரவேற்புத் தந்தனர் என்று கூறுதல் தவறல்ல. இக்கால கட்டத்தில் தோன்றிய அப்பரும், சம்பந்தரும் செய்த புரட்சியே தமிழிசை புது வாழ்வு பெறக் காரணமாகியது எனலாம். பின்னும் தமிழ் இசைக்குச் சோதனைகள் இல்லாமல் இல்லை. தமிழகம் விஜயநகர ஆட்சிக்கு உட்பட்டபோது கர்நாடக இசை தமிழகத்தில் கால் வைத்தது. நாயக்கர், மகாராஷ்டிரர் அரவணைப்பால் கர்நாடக இசை வளர்ந்து தமிழ்ப் பாக்களும், பண்களும் பெரும்பாலும் வழக்கொழிந்தன.

இந்த நிலையில் தமிழிசைக்கு வாழ்வு தந்த பெருமக்கள் இருவரை நினைவு கூருதல் நன்றிமறவாச் செயலாகும். தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் ''இருனா மிருத சாகரமும் விபுலானந்த அடிகளின் யாழ் நூலும்'' தோன்றியிருக்கா விட்டால் என்ன நடந்திருக்குமோ? மொழிப் பற்று மிகுந்த வள்ளல் ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியாரால் தமிழ் இசைச் சங்கமும், தமிழிசைக் கல்லூரியும் அண்ணாமலைக் கழகத்தின் இசைக் கல்லூரியும் நிறுவப்படாதிருந்தால் ...

இந்த மரபில் வந்த இசைப் புலவர்களே ஈழத்தமிழ் மண்ணில் இசை மழை பொழிந்து இன்னலை மறக்கச் செய்கிறார்கள் என்று நினைக்கும் போது உள்ளத்தில் தேன் சுவைக்கிறது. தமிழிசை இவர்கள் நெஞ்சில் அரசோச்ச வேண்டும் என்று ஆசைப்படுகிறது.

''துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீஇன்பம்சேர்க்கமாட்டாயா'' என்று பாடினார் பாரதிதாசன் துன்பமா? அது இன்ப வீட்டின் ஏறுபடிகள் தானே என்று சிந்திக்கத் தொடங்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் ஈழ மக்களுக்கு 'ஐந்து நாள் தமிழிசை விழா' என்ற தேன் ஆர் அமுதச் சொற்கள் தெவிட்டாதனவாகும். நூறுகலைஞர்கள் பங்கு கொள்ளும் தமிழிசை விழா வேறு எங்கும் நிகழ்ந்ததாக நான் அறியவில்லை. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் ஏலவே தமிழுக்கு விழா எடுத்து உறுமிப் பயப்படுத்தும் குண்டுமிழும் வான் ஊர்திகளும் ஏவுகணைகளும் தம்செயல்களைச் செய்யவும் வரலாறு படைத்த பாரம்பரியம் உடையது இன்று இசைப்பெருவிழா - தமிழிசைப் பெருவிழா எடுக்கிறது. கழகமே! வாழ்க நீ பல்லாண்டு. நாளை உன் விழா வெற்றி விழாவாக அமைவதாக.

தமிழ் வாழ்க, தமிழிசை வெல்க, தமிழிசைப் பெரும் புலவர்கள்நீடுவாழ்க,வாழ்த்துகிறது தமிழ் நெஞ்சம்.

க. சிவராமலிங்கம்

# மிகவும் கற்பனையான முறைப்பாடு

## - ஜெயலலிதா

தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் நசுக்கப்படுவது பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

திருப்பதியில் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டை முடித்துக் கொண்டு டில்லி திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசினார் அப்போது செய்தியாளர்கள் இக்கேள்வியைகேட்டதும்தனக்கேஉரித்தான சாதுரியத்துடன் ஜெயலலிதாவை நோக்கி பாருங்கள் இந்த முறைப்பாட்டை அவர்கள் தெரிவிக்கின்றனரே எனக் கூறினார்.

அப்போது இது மிகவும் கற்பனை வாதத் தன்மையான முறைப்பாடு என்று ஜெயலலிதா பதிலளித்தார்

சென்னையில் பத்திரிகையாளர்

# தமிழக அரசைக் கண்டித்து ஒரு நாள் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழ்நாட்டில் பத்திரிகைகளையும், பத்திரிகையாளர்களையும், ஒடுக்கும் மாநில அரசின் நடவடிக்கைகளை ஆட்சேபித்தும், பத்திரிகைச் சுதந்திரத்தை வெளிப்படுத்துவதற்கு தடையாக இருக்கும் சகல நடவடிக்கைகளையும் வாபஸ் பெறக் கோரியும் தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையில் குறளகம் கட்டடத்தின் எதிரே கடந்த புதன் கிழமையன்று உண்ணாவிரதம் இருந்தனர்.

இதே வேளை பத்திரிகைகள் தொடர்பான விரோதப் போக்கைக் கைவிடுமாறும், தப்பெண்ணங்களையும் தவறான விளக்கப்பாடுகளையும் களைய பத்திரிகை ஆசிரியர்களுடனும், பத்திரிகையாளர் அமைப்புகளுடனும், பேச்சு வார்த்தை ஒன்றை ஆரம்பிக்குமாறும் சென்னை பத்திரிகையாளர் கழகம் தமிழக அரசிடம் கோரியுள்ளது,

இக்கழகத்தின் தலைவரும், செயலாளரும் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையொன்றில் பத்திரிகையாளர் கே. பி. சுனிலை கைது செய்யுமாறு சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா விடுத்த உத்தரவும், மாலை முரசு முரசொலி பத்திரிகைகளின் நிருபர்களையும் ஆசிரியர்களையும் எச்சரிக்கை செய்ய மேற்கொண்ட தீர்மானமும் சட்டசபையின் சிறப்புரிமைகள் என்ற பெயரில் பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்க எடுக்கும் எத்தனங்களே.

தமிழ்நாடு சட்டசபை

# பத்திரிகையாளர் விவகாரம் செயலரை ஆஜராக உத்தரவு

(சென்னை)

தமிழக சட்டப் பேரவைச் செயலாளரை வரும் 5 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இந்திய உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

கோவை மாலை முரசு ஆசிரியர் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாதனக்குக் கைது உத்தரவு பிறப்பித்திருப்பதை தடை செய்யுமாறுகோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருப்பது தொடர்பாகச் சில தகவல்களை பெறுவதற்காக பேரவைச்செயலாளர் ஜானகிராமனை ஆஜராகுமாறுஇந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜானகிராமனிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல்களைப் பதிவு செய்யுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு கடந்த வியாழன் உத்தரவிட்டது. அந்தப் பதிவாளரால் ஜானகிராமனிடமிருந்து தகவல்களை வாங்க முடியாததால். இந்தப் புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாலைமுரசுஆசிரியர்தாக்கல் செய்த வழக்கு தொடர்பாக ஜானகி ராமன் தெரிவிக்கும் தகவல்களின் அடிப்படையில் தகவல்கள் கிடைத்த மறுநாள் விசாரணை நடைபெறும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

# பத்திரிகைகளுக்குதண்டனை எந்தத் தொடர்பும் இல்லை

## - ஜெயலலிதா

(சென்னை)

என்னைக் கண்டித்து எழுதும் பத்திரிகைகளுக்கு எதிராக பழிவாங்கும் நோக்குடன் நான் பேசுவதாக தவறான எண்ணம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சட்ட சபையில் சிறப்புரிமைக் குழுவினால் செய்யப்பட்ட விதப்புரைகளின் அடிப்படையில் சில நிருபர்களுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எதிராகச் சபாநாயகர் வழங்கிய குறைந்த பட்சத் தண்டனையே இதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்படுகிறது. இந்தப் பிரச்சினையுடன் எனக்கு எதுவித தொடர்பும் இல்லை என்பதை தெளிவாகக் கூறி வைக்க விரும்புகிறேன் எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீதான பொது விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்க அல்லது கட்டுப்படுத்தத் தானோ தனது அரசோ நோக்கமெதையும் கொண்டிருக்கவில்லை என்றும் கூறினார்.

# அகதிகளை அனுப்புவது இப்போது உகந்ததல்ல

## —பண்ருட்டி ராமச்சந்திரன்

தமிழ் நாட்டின் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரிக்க அகதிகளுக்கானஐ நா.உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியை தமிழக அரசு நாடவேண்டும் என பாட்டாளி மக்கள்கட்சியை சேர்ந்த சட்டசபை உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆலோசனை கூறியுள்ளார்.

சட்டசபையில் நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்.

இலங்கைக்கு திரும்புமாறு அகதிகளை அரசாங்க அதிகாரிகள் நிர்ப்பந்திப்பதாகதகவல் கிடைத்திருப்பதாகவும், அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்தில் மத்திய அரசுடன் தமிழக அரசு பேச்சுநடத்த வேண்டும் எனவும், இலங்கையின் வடக்கு கிழக்குபகுதியில் நிலைமைமோசமாகிவருவதால் அகதிகளை திருப்பி அனுப்புவது உகந்ததல்ல எனவும் குறிப்பிட்டார்.

# வீரமணி கைது

(சென்னை)

காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்தக்கோரி மறியல் போராட்டம் நடத்திய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணியும் திராவிட தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

## விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

# தமிழிசை விழா

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதி

## இரண்டாம் நாள் 3-5-1992 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள்

மாலை 5. 00 மணி தொடக்கம் 6. 00மணிவரை மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. பி. எஸ். பிச்சையப்பா | — திரு. பி. ரவீந்திரன் |
| திரு. ரஜீந்திரன் | — திரு. ரி. இராசேந்திரன் |
| திரு. என். இராசன் | — திரு. ரி. சுந்தரலிங்கம் |
| திரு. எஸ். கண்ணன் | — திரு. வி. சபேசன் |

6. 00 மணி தொடக்கம் 7. 00 மணி வரை பாட்டு

| | |
|---|---|
| செல்வி சாரதா சச்சிதானந்தம் | — பாட்டு |
| செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் | — வயலின் |
| திரு. கே. துரைராசா | — மிருதங்கம் |

7.00 மணி தொடக்கம் 8. 00 மணி வரை பாட்டு

| | |
|---|---|
| திரு. எஸ். செல்லத்துரை | — பாட்டு |
| திரு. எஸ். கேசவமூர்த்தி | — வயலின் |
| திரு. எஸ். மகேந்திரன் | — மிருதங்கம் |
| திரு. எஸ். துரைராசா | — கெஞ்சிரா |

8. 00 மணி தொடக்கம் 8. 30 மணி வரை சிறப்பு விருந்தினர் உரை

1. திரு. சீ. வி. கே. சிவஞானம் அவர்கள் (முன்னாள் மாநகரசபை ஆணையாளர்)
2. திரு. விசு அவர்கள் (அம்பாறை, மட்டுநகர் அரசியல் பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப் புலிகள்)
3. திரு. செல்வராஜா அவர்கள் (தனபதி, யாழ். மாவட்டம்)

8. 30மணி தொடக்கம் 9.30மணி வரை பாட்டு

| | |
|---|---|
| திரு. எஸ். பாலசிங்கம் | — பாட்டு |
| திரு. வி. கே. குமாரசாமி | — வயலின் |
| திரு. சிதம்பரநாதன் | — மிருதங்கம் |

9. 30 மணி தொடக்கம் 10. 30 மணி வரை இரு வயலினிசை

| | |
|---|---|
| திரு. ஆர். ராதாகிருஸ்ணன் | — வயலின் |
| திரு. எஸ். கோபிநாத் | — வயலின் |
| திரு. கே. கண்ணதாசன் | — மிருதங்கம் |
| திரு. பி. கணேசன் | — தவில் |
| திரு. சதாவேல்மாறன் | — கடம் |
| திரு எஸ். நாகராஜன் | — கெஞ்சிரா |
| திரு. எஸ். ராஜா | — முகர்சிங் |

## சியாரா லியோனில் திடீர் இராணுவப் புரட்சி

மேற்கு ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் அதிருப்தியுற்ற துருப்புக்கள் திடீர் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதையடுத்து அதிபர் மொமோ அயல் நாடான கினிக்கு தப்பியோடியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

நாட்டை ஆள்வதற்காக பதினெட்டு உறுப்பினர் கொண்ட சபையொன்றை திடீர் புரட்சி செய்தவர்கள் அமைத்து இருப்பதாகவும், லெப். கேணல் யசியா கானோ நாட்டை இப்போது நிர்வகிப்பதாகவும், பல கட்சி ஆட்சி முறையையே இராணுவம் ஆதரிப்பதாகவும் ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன.

## முதலாவது பிறந்த தினவாழ்த்து




★ செல்வி தர்ஷிகா ★

மாவிசந்தி அல்வாய் தெற்கில் வசிக்கும் சுந்தரம் சுசீலா தம்பதிகளின் செல்வப் புதல்வி ''தர்ஷிகா'' இன்று (03. 05. 92) தனது முதலாவது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மாமார். பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அன்ரிமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், அத்தான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் ஆண்டவன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

(2503)

## ஓராண்டு நினைவில்



அமரர்

சிவஞானதேசிகர் சிவசுப்பிரமணியம்

மலர்வு 21-05-1921 உறைவு 03-05-1991

திருமலை மதியே! எம்மரும் ஒளியே!!
நிலையான உன் நினைவால் ஓராண்டே

உருண்டதையா

அன்புச் சகோதரன் பொ. கனகராசா
சகோதரர், மைத்துனர், பெறாமக்கள், மருமக்கள்

(சி/4318)

# அமெரிக்காவில் இனக்கலவரம்; 35 பேர் பலி; 1800 பேர் காயம்

### நீதிமன்றத் தீர்ப்பின் எதிரொலி

(வாஷிங்டன்)

கறுப்பர் இனத்தைச் சேர்ந்த கார்ச்சாரதி ஒருவரைத் தாக்கிதாக பொலிசார் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் வெள்ளையரான நான்கு பொலிசாரும் குற்றவாளிகள் இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து அமெரிக்க நகரமான லொஸ் ஏஞ்சல்ஸில் கறுப்பருக்கும்வெள்ளையருக்குமிடையிலான இனக்கலவரம் மூண்டுள்ளது. இக்கலவரத்தில் 35 பேர் கொல்லப்பட்டதுடன் 1800 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

கொலை, கொள்ளை, தீவைப்புச் சம்பவங்கள் லொஸ் ஏஞ்சல்ஸிலும் அயல் மாநிலங்களிலும் பரவியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இனக்கலவரங்கள் மூண்டிருப்பதையடுத்து இரவு நேர ஊரடங்கு உத்தரவும் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் குற்றமற்றவர்கள் என்று கூறப்பட்ட இந்த நான்கு பொலிசாருக்கும் எதிராக சிவில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் வாய்ப்பை பெரல் அரசு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

கறுப்பினக் கார்ச்சாரதி ஒருவரைக் கைது செய்த நான்கு வெள்ளை இனப் பொலிசார் அவரைக் கடுமையாகத் தாக்கியதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில், குறிப்பிட்ட சாரதி வேகக்கட்டுப்பாட்டை மீறியதாகவும், போதை நிலையில் வாகனம் செலுத்தியதாகவும் பொலிசார் தெரிவித்தனர். ஆனால் இச்சம்பவம் முழுவதையும் வீடியோக் கமராவில் பதிவு செய்த தனிநபர் ஒருவர் அப்பதிவு நாடாவை நீதி மன்றத்தில் சமர்ப்பித்தபோது பொலிசாரின் குற்றச்சாட்டுக்கள் உண்மையற்றவை எனத்தெரிய வந்தது எனினும்ஜூரர்களும், நீதிபதிகளும் பொலிசாரை விடுதலை செய்தனர். இதனையடுத்தே கலவரங்கள் மூண்டதாகச் சொல்லப்படுகிறது. இந் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னணியில் புஷ் நிர்வாகம் தலையிட்டதாகவும் கூறப்படுகிறது.

# கலவரம் பாதித்த இடங்களுக்கு துருப்புக்களை அனுப்ப உத்தரவு

(வாஷிங்டன்)

ஐயாயிரம் இராணுவத் துருப்புக்களையும், சட்டப் பராமரிப்பு அதிகாரிகளையும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திற்குச் சென்று வன்முறையை அடக்க பொலிசாருக்கு உதவிடுமாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உத்தரவிட்டிருக்கிறார்.

கடந்த இரு நாட்களில் அங்கு நடந்த இனக்கலவரங்களில் முப்பத்தைந்துக்கும்அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்து எண்ணூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இதனிடையே நெருக்கடியைத் தீர்க்கும் முயற்சியாக கறுப்பினத் தலைவர்களை அதிபர் மாளிகையில் சந்தித்து அமெரிக்க அதிபர் புஷ் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

சான்பிரான்சிஸ்கோ, பிலடெல்பியா, லொஸ் ஏஞ்சல்ஸ், சியாட்ரில், லொஸ்வேகாஸ், அட்லான்டா மற்றும் வேற்றாஸ்க் ஆகிய நகரங்களுக்கும் இனக் கலவரம் பரவியிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

ஆயிரத்துஐநூறுக்கும் அதிகமான தீவைப்பு சம்பவங்களும் இடம்பெற்றிருப்பதுடன், இருபது கோடி டாலர் பெறுமதியான சொத்துகளுக்கும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

### ஜேர்மனியில்

# பொது வேலை நிறுத்தம் கிழக்கு பங்கு பற்றவில்லை

(பேர்லின்)

ஜேர்மனியில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தில் கிழக்கு ஜேர்மன் பங்கு பற்றவில்லை. மேற்கு ஜேர்மன் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. கிழக்கு மேற்கு என்கின்ற வித்தியாசமில்லாமல் ஐக்கிய ஜேர்மனியே காணப்படுகிறது. எனினும் கிழக்கு ஜேர்மனியிலிருந்து புறப்படும் பஸ்வண்டிகள் முன்னாள் கிழக்கு ஜேர்மன் எல்லையில் நின்று விடுகின்றன. பிரதான ஜேர்மன் சுவரிலிருந்த எல்லையோடு வண்டிகள் நிறுத்தப்படுகின்றன.

மேற்கு ஜேர்மனி மீண்டும் சுவரைக் கட்டியது போன்று இருக்கிறதென பிரயாணத்தைத் தொடர முடியாத ஒரு பிரயாணி தெரிவித்தார்.

தலைக்கு மேலாகச் செல்லும் ரயில் வண்டிகளும் கிழக்கு ஜேர்மன் எல்லையைத் தாண்டவில்லை.

தபால் நிலையங்களும் அப்படித்தான் மேற்கு ஜேர்மன் விலாசமிட்ட கடிதங்கள் போடப்பட்ட இடத்திலேயே காணப்பட்டன.

1990ஆம் ஆண்டு கிழக்கு ஜேர்மனி கம்யூனிஸ்ட் கட்சியை ஒழித்து விட்டு பிரிவினை காட்டும் மதிலை உடைத்தெறிந்தது தெரிந்ததே. எனினும் இன்று மதிலிருப்பது போன்று காணப்படுவதாக அங்குள்ள பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

### அகதிகள் விடயத்தில்

# கடும்போக்கை கடைப்பிடிக்க ஜேர்மன் அரசாங்கம் முடிவு

(பேர்லின்)

ஜேர்மனியின் தாராள அகதிகள் கொள்கையைக் கைவிட ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணக்கம் தெரிவித்திருப்பதாக தெரியவருகின்றது.

இவ்வாண்டில் நான்கு லட்சம் அகதிகள் புகலிடம் கோருவர் என எதிர்பார்க்கப்படுவதைத் தொடர்ந்து அகதிகள் விடயத்தில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க அதிபர் கெல்மட் கோலின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியும், எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகக் கட்சியும் இணக்கம் கண்டுள்ளன.

ஜேர்மன் பாராளுமன்றத்தில் அதிகரிக்கும் வெளிநாட்டவர் வருகை பற்றிய விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதுவிடயமாக ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சமரச உடன்பாட்டிற்கு வந்துள்ளன.

சென்ற ஆண்டில் மட்டும் சுமார் இரண்டரை லட்சம் வெளிநாட்டவர் ஜேர்மனியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

# காங்கிரஸ் - அ. இ. அ. தி. மு. க கூட்டில் கசப்பு நிலை

(சென்னை)

தமிழகத்தில் ஆளும் அ. இ. அ. தி மு. கவிற்கும் இந்திரா காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே கசப்புணர்வுகள் மேலோங்கி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

அ. தி. மு. கவினரால்கொண்டுவரப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை காங்கிரஸ் கட்சியின் கொறடாவான சுந்தரதாஸ் கடுமையாக விமர்சித்துள்ளார். மக்களுக்கு பயன் தரக்கூடிய திட்டங்கள் எதுவும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்க முடியவில்லை என்று அவர் வர்ணித்தார்.

மேலும் அதிமு.க ஆட்சியில் விலைவாசி உயர்வு ஏற்பட்டிருப்பது குறித்து தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ்கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா எப்போதும் மாற்றுக் கட்சியினரை அரவணைத்துச் செல்பவராகக் காணப்படவில்லை என்றும் இதே போக்கைத் தான் காங்கிரஸ் கட்சியோடும் கடைப்பிடிப்பதாகவும் இது காங்கிரஸ்சாருக்கு எரிச்சலூட்டுவதாகவும் கூறப்படு

# பொருளாதார சுதந்திரம் படிப்படியாக பறிபோகிறது

### - பாரதீய ஜனதா கவலை

(டில்லி)

பெரும் கடன்சுமையையும் பன்னாட்டு நிறுவனங்களின் நுழைவையும் அடுத்து நாட்டின் பொருளாதார சுதந்திரம் படிப்படியாக பறிபோவதாக பாரதீய ஜனதாக்கட்சி கூறியுள்ளது.

கட்சியின் பொருளாதாரக் கொள்கை பற்றி தேசிய சபைக் கூட்டம் காந்திநகரில் நடைபெற்றபோது விவாதிக்கப்பட்டது. அப்போது வெளி

தாழ்ந்த நிலையில் உள்ள மக்களுக்கும் வளர்ச்சிப் பணிகளின் பயன்கள் கிடைக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மேலும் தாறுமாறான பொருளாதாரக் கொள்கைக்காக மத்திய அரசின் மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் நேரு வழிப் பொருளாதார அபிவிருத்தி தோல்வி அடைந்துவிட்டதாக குறிப்

## சிந்தனைக்கு

மூளை மட்டும் ஒரு தத்துவ ஞானியை உருவாக்கி விடாது. இதயமும், உறுதியுமே, அவரை முழுமையாக்கும்.

— ஆந்த்தனி ஆஷ்லி கூப்பர்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 03-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2339 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# புலிகளைத் தவிர்த்து பிரச்சினைக்குத் தீர்வு ?

"வடக்கு - கிழக்கு யுத்தத்தைத் தொடரவிட முடியாது. இதனால் எமது பொருளாதாரம் சீர்குலைந்து அப்பாவி உயிர்கள் பலியாகின்றன. இப்பிரச்சினைக்கு இன்றைய முக்கிய தேவை அரசியல் தீர்வே என முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சரும், தற்போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தர்களில் ஒருவருமான லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார். மேலும் அவர் புலிகளைத் தனிமைப்படுத்தி, அதன் பின்னர், சகல அரசியல்கட்சிகளுடனும் ஒன்று கூடிப் பேச்சுவார்த்தை நடத்தி இறுதியான முடிவுகாண வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி குறிப்பிட்டிருப்பது போன்று இனப்பிரச்சினைக்கு விரைவில் ஓர் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பது அவசியமானதே. இல்லாவிடில் பெரும் உயிர் இழப்புக்களும், பொருளாதார நஷ்டங்களும் ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்பதும் சரியானதே. ஆனால், திரு. லலித் அத்துலத் முதலி இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக வெளியிட்டுள்ள ஆலோசனைதான் அவர் இந்த நீண்ட போரின் பின்பும் தனது கொள்கையை விட்டு கொடுக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. அதாவது அன்று ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது இனப்பிரச்சினை தீர்வு குறித்து அவர் கொண்டிருந்த கருத்தையே இன்றும் கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்பது தனியாக, திரு. லலித் அத்துலத் முதலியின் திட்டமல்ல. இந்தியா, சிறிலங்கா அரசுகளின் திட்டமும் இதுதான். இத்திட்டம் ஒருமுறை இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டும் பார்க்கப்பட்டது. ஆனால், தோல்வியில் முடிவுற்றது. மீண்டும் அதை நடை முறைப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது முயற்சித்து வருகின்றது.

ஆனால், இது எந்தளவிற்குச் சாத்தியமாகும். இது எவ்வேளையிலும் சாத்தியமாகப் போவதில்லை என்பதை உணர்த்துவதற்கு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினப் பேரணியே போதுமானதாகும். சிறிலங்கா இராணுவத்தின் பெரும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், பெரும் பொருளாதாரத் தடையினால் ஏற்பட்ட சொல்லொண்ணாத் துன்பங்களுக்கு மத்தியிலும், புலிகள் ஏற்பாடு செய்த மேதினப் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

மேதினப் பேரணியில் புலிகளின் கீழ் அணிதிரண்ட இந்த மக்கள் சமுத்திரம் சில உண்மைகளை உலகிற்குப் பறை சாற்றியுள்ளது. இதில் முக்கியமானது, எந்த நெருக்கடியிலும் தமிழீழப் போராட்டத்தை மக்கள் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதோடு, விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதையும் ஆகும். அதாவது, தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப்புலிகளுடன் மக்கள் உள்ளார்கள் என்பதேயாகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு புலிகளை தனிமைப்படுத்தி தீர்வு காணுதல் என்பது எப்படிச்சாத்தியமாகும். ஆனால் சிங்கள அரசியல் வாதிகள் விரும்பத்தைப் போன்று தென்னிலங்கை சிங்கள அரசியல் கட்சிகளிடம் இருந்தும், கொழும்பிலுள்ள தமிழ்அரசியல் கட்சிகளிடம் இருந்தும், குழுக்களிடம் இருந்தும் விடுதலைப்புலிகள் வேறுபட்டு, தனித்துத்தான் நிற்கின்றார்கள். ஆனால், புலிகள் தமிழ் மக்களின் உணர்ச்சிகளுடன் பிணைக்கப்பட்டு, தமிழ் மக்களுடன் நிற்கின்றார்கள். ஆகையினால், புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது, தமிழ்மக்களை தனிமைப்படுத்தி, புறக்கணித்து விட்டு இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பது போன்றதாகும். அவ்வாறானால் தமிழ் மக்களைத் தவிர்த்து தமிழர்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமா?

# பூநகரிப் பிராந்தியத்தில் மாபெரும் எழுச்சிப் பேரணி

பூநகரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மே தின எழுச்சிப் பேரணியும் பொதுக்கூட்டமும் இடம்பெற்றன.

சாமிக்குளத்தில் ஆரம்பமான எழுச்சிப்பேரணி நல்லூர் அரசினர் பாடசாலையில் முடிவடைந்தது இவ் எழுச்சிப் பேரணியில் சிறிலங்கா இராணுவத்தால் பாதிக்கப்பட்ட மீனவரின் நிலையைச் சித்தரிக்கும் ஊர்திகளும் சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழீழ மக்கள்மீது பிரயோகிக்கப்படும் ஒடுக்குமுறையை சித்தரிக்கும் ஊர்திகளும் கலந்து கொண்டன.

பேரணியின் இறுதியில் இடம்பெற்ற எழுச்சிக் கூட்டத்திற்கு நல்லூர் அரசினர் பாடசாலை அதிபர் திரு. பொன். தில்லைநாதன் தலைமைதாங்கினார். பூநகரி முளங்காவில் பகுதி மக்களுறவு கொள்கைமுன்னெடுப்புபொறுப்பாளர் திரு. மதன்ராஜ் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பெருமளவு மக்கள் இவ் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டு சிறிலங்கா அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

# வர்த்தக வங்கி ஊழியருக்கு 27 சதவீத சம்பள உயர்வு

தனியார்வர்த்த வங்கிகளில் பணியாற்றும் சுமார் 8000 ஊழியர்களுக்கு 27 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட உள்ளதாகவும் வர்த்தக வங்கி ஊழியர்களில் மூன்று கோரிக்கை தொடர்பான ஒப்பந்தம் அடுத்த வாரமளவில் கைச்சாத்திடப்படும் எனவும் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது

மேலும் வங்கி ஊழியர்களுக்கு பயனுள்ள ஊழியர் சேமலாபநிதிமுறை, 24 மணி நேரமும் அமுலாகும் விதத்தில் காப்புறுதித்திட்டம் போன்ற கோரிக்கைகளை பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததால் உத்தேச எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது

மேற்படி கோரிக்கைகளை பெற்றுக் கொள்வதன் பொருட்டு இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர் டி. சிறிபாலா தலைமையிலான பிரதிநிதிகள் வர்த்தக வங்கித் தலைவர்களுடன் கடந்த ஏழு மாதங்களாக பேச்சு வார்த்தையில் 15 முறை ஈடுபட்டிருந்தனர்.

மேற்படி பேச்சு வார்த்தையின் மூலம் மாதாந்த சம்பளத்தில் 27 சதவீத சம்பள உயர்வு, ஊழியர் சேமலாப நிதி இனி மேல் முழுச் சம்பளத்தில் 8 - 12 வீதமாக அதிகரித்தல், 24 மணி நேரமும் ஊழியர் காப்புறுதி திட்டம் ஆகியன கிடைத்துள்ளன மேலும்;

1995ஆம் ஆண்டு வரையிலான சேவை ஒப்பந்தத்தை ஒன்பது மாதங்களுக்கு முன்னர் தனியார்வங்கி, ஊழியர் சம்பளம் கொடுப்பனவு ஆகியன குறித்து மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தல்.

இக்கோரிக்கைகளுக்கு அமைய தனியார் வர்த்தக வங்கிகளில் எட்டு வங்கிகளில் ஊழியர்களுக்கே சம்பள உயர்வு வழங்கப் படஉள்ளது.

# உடுகம்பொல மீது அரசை அவமதித்ததாக நீதிமன்றம் நோட்டீஸ்

(கொழும்பு)

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. பிரேமதாசா உடுகம் பொலைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தின் பேரில் கொழும்பு ஹைகோர்ட் நீதிபதி திருமதி சிராணி திலகவர்தன திங்களன்று அவர் மீது நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் மீது வெறுப்பு, குரோதம், கொந்தளிப்பை ஏற்படுத்தியதாகவும் அரசாங்கத்தை அவமதித்ததாகவும் பல்வேறு பிரஜைகள் குழுக்களுக்கிடையேயும் கருத்துவேறுபாடு, விரோதத்தை ஏற்படுத்தியதாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜனவரிக்கும் மார்ச் 14 ஆம் திகதிக்கு மிடையில் வடமத்திய மாகாணத்தில் இடம் பெற்ற அநேக கொலைகளுக்கும் ''கறுப்புப் பூனைகளே'' பொறுப்பாளிகள் என்று எதிரி அத்த பத்திரிகையில் ஏப்ரல் 8 ஆம் திகதி குறிப்பிட்டிருந்தது தொடர்பாக இக்குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மே மாதம் 29 ஆம் திகதி அன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி உடுகம பொலை மீது நோட்டீஸ் பிறப்பித்தார்.

# மாத்தளை நகரில் தீ; கட்டடம் முற்றாக நாசம்

## மூன்று சிறுவர் காயம்

(கொழும்பு)

மாத்தளை நகரில் பாலர் பாடசாலைக்களில் உள்ள கட்டடம் தீ பற்றி முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது.

தீக் காயங்களுக்குள்ளான மூவர் மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் ஒருவர் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட் கிழமை காலை இத் தீ விபத்து ஏற்பட்டதாகவும் மாத்தளை பொலிஸ் நிலையத்துக்கும் தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடத்திற்கு மிடையில் உள்ள இருமாடிகளைக் கொண்ட கடையே எரிந்து சாம்பராகியுள்ளது.

இத் தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை மாத்தளைபொலிசார் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் பொலிசார் எடுத்த தீவிர நடவடிக்கை காரணமாக பாலர் பாடசாலை மாணவர் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப் பட்டிருந்தனர்

# நீர்கொழும்பில் இளைஞர் சடலம்

நீர்கொழும்பு அலஸ் வீதியில் தமிழ் இளைஞரொருவரின் சடலத்தை கண்டுபிடித்ததாக நீர்கொழும்பு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# தபால் திணைக்களத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கை

(கொழும்பு)

அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அவர்களின் தபால் சேவையை பூர்த்தி செய்யும் வகையில் நேற்றிலிருந்து தபால் திணைக்களத்தின் மறு சீரமைப்பு நடவடிக்கைகள் அமுலுக்கு வருவதாகவும் இதன்படி அந்தந்த பகுதி மக்களின் தேவைக்கு ஏற்ப தபால் சேவையை முறையாக மேற்கொள்ளும் வகையில் பிராந்தியம் தோறும் பிரதி தபால் மா அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தபால் தொலைதொடர்பு அமைச்சர் கொள்ளுப்பிட்டி இராமோதய மண்டபத்தில் கடந்த செவ்வாய் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது பொதுமக்களுக்கு திருப்தியான சேவையை வழங்கும் பொருட்டு நிர்வாக மட்டத்தில் குறிப்பிட்ட முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரங்களைக் கொண்ட ஒன்பது பிராந்திய பிரதி தபால் மா அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

தபால்மாஅதிபரின் அனுமதியைப் பெற கொழும்பு செல்லும் வீண்சிரமங்கள் இம் மறுசீரமைப்பால் தடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பிராந்திய பிரதி தபால் மா அதிபர்களே அந்தந்தபகுதி நிருவாகங்களுக்கும் பொறுப்பாக இருப்பார்கள்.

லிகிதர் தபால் அதிபா சமிக்ஞையாளர்கள் ஆகிய தரங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தபால் சேவை அதிகாரிகள் என்று மாற்றப் படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# எவ்வாறேனும் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும்

## -பிரேமதாசா

(காலி)

எவ் வழியிலேனும் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நாம் தீர்வு காண்போம் என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற மத வைபவமொன்றில் உரையாற்றிய அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஆயுத பலத்தாலும், பலாத்காரத்தாலும் பெறமுடியாத அமைதி மற்றும் அன்பை பக்தி மூலம் பெற்றுக்கொள்ள முடியுமெனவும், மத அனுஷ்டானங்களால் அனைத்து சவால்களையும் சமாளிக்க முடியுமென்றும் தெரிவித்தார்.

தற்போது பௌத்த குருமாரும், ஏனைய சமய குருமார்களும் வடக்குசென்று நிலைமையை ஆராய்ந்து வரத் தொடங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# வவுனியா மாவட்டப் பகுதியில் சிங்களகுடியேற்றம்விஸ்தரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் துரிதமாக சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராணுவத்தின் பாதுகாப்பின் கீழுள்ள கொக்குவெளி, செட்டிக்குளம்உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன

வவுனியா - யாழ் வீதியில் நொச்சிமோட்டைப் பகுதிக்கு தெற்கேயுள்ள கொக்குவெளி கிராமப்பகுதியில் ஏராளமான சிங்களக்குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. குடியேறி உள்ள இக்குடும்பங்களுக்குஅரசாங்கத்தினால் நிவாரண உதவிகளும், பண உதவியும் வழங்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றப் செய்யப்பட்டு இப்பிரதேசத்தைச் சிங்கள மயமாக்குவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகத்தகவல்கிடைத்துள்ளது.

அரசின் இத்திட்டத்திற்கு முன்னோடி நடவடிக்கையாக இப்பிரதேசத்தை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பொதுமக்கள் பெருமளவில் இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள இவ்வேளையில் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிக்க இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. (தி)

## தொண்டர் ஆசிரியர் குழு பிரேமாவை சந்திக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்திப்பதற்காக வெகு விரைவில் கொழும்பு செல்ல இருக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்த நியமனம் தொடர்பாக இதுவரை காலமும் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து தொண்டர் ஆசிரியர் சங்கம் தன்னிச்சையாக எடுத்துவரும் சில நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்திப்பதற்கான திகதியை நிர்ணயிப்பதற்காக ஏற்கனவே முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மிகவிரைவில் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பிற்குப் புறப்பட்டுச் செல்ல இருக்கிறது. மேற்படி தகவல்களை தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## அரச ஊழியர்களின் சம்பள மாற்றம் குறித்து ஆராயப் பணிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்குச் சம்பளத் திட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குமாறு சம்பளம் மற்றும் ஆளணிஆணைக் குழுவை அரசு பணித்துள்ளது.

தொழிற்சங்கங்கள், அரச ஊழியர் நிறுவனங்களிடமிருந்துஆணைக்குழுமே 31 ஆம்திகதிக்கு முன்னதாக ஆலோசனைகளை எதிர்பார்க்கிறது. நேரில் அல்லது எழுத்து மூலமாக ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் மாவட்டத்தில் மேதின எழுச்சிப் பேரணி

இராணுவ தாக்குதல்களுக்கு மத்தியிலும் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் மேதின எழுச்சிப் பேரணியும் மாபெரும் பொதுக் கூட்டமும் இடம்பெற்றுள்ளது.

மடு அகதி முகாமில் இடம்பெற்ற எழுச்சிப் பேரணியில் முகாம் அகதிகள் அனைவரும் கலந்து கொண்டனர். பேரணியின் இறுதியில் இடம்பெற்ற எழுச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அமுதன் அவர்கள் உரையாற்றுகையில் ''தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்த அவலமான காலத்தில் இன்றைய எழுச்சி பயன் மிக்கதாகும் என தெரிவித்தார்.

முழங்காவிலில் நடைபெற்ற மற்றுமோர் எழுச்சிப் பேரணி முழங்காவில் மாவீரர் கலையரங்கில் ஆரம்பமாகி யோகபுரம் பாடசாலை மைதானத்தைசென்றடைந்தது இரண்டு மைல் நீளமான இப் பேரணியில் தமிழீழத்தின் இன்றைய நிலையைச் சித்திரிக்கும் ஊர்திகளும் இடம்பெற்றன.

எழுச்சிக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் திரு. ஜோய், பூநகரி - முழங்காவில் பிரதேச மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி. வினோதா, பிரதேச ஆய்வுநிறுவனப்பொறுப்பாளர்திரு.ராம்ராஜ், பிரதேச அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு செளந்தர், உதவி அரசாங்க அதிபர் திரு. ரவீந்திரன் ஆகியோர்உரையாற்றினர்.

## கிளி. தொண்டர் ஆசிரியர் பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை 9-00 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல ஆசிரியர்களையும் தமது பூரண விபரங்களுடன் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் விரைவில் கல்வி அமைச்சுடன் இந் நியமனம் சம்பந்தமாக நேரடித் தொடர்பு கொள்ள இருப்பதால் தவறாது இக் கூட்டத்திற்கு அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்;

### குடாநாட்டின்

னக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொள்வதில் இலங்கைப் படைகள் ஈடுபட்டிருப்பதாகவும்கூறப்பட்டுள்ளது

### காத்திரமான

பண்டித மாதம்பகம அஸாஜி தேரர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில், இதன்மூலம் பேச்சுக்கள் மூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள தமிழ் மக்கள் வடக்கு கிழக்கை தமிழர் தாயகமாக ஏற்றுக் கொண்டு சுய உரிமை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

புலிகளால் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள 40 பொலிசார் 1 இராணுவ அதிகாரி அனைவரும் சிறப்பான முறையில் பராமரிக்கப்படுகின்றனர் என்றார்.

## மணலாறு மாவட்ட மேதின நிகழ்வுகள்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்திலும் நேற்றுமுன்தினம் எழுச்சிப் பேரணியும் எழுச்சிக்கூட்டமும் இடம்பெற்றன.

பொதுக்கூட்டத்தில் மணலாறு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஈழமாறன், மணலாறு மாவட்ட ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு. விதுரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் அங்கு இடம் பெற்ற உற்பத்தி எழுச்சி வாரத்தில் நடாத்தப்பட்ட தொழிற்போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

## சமாதான முயற்சிகளை கைவிடப் போவதில்லை - தொண்டமான்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் சமாதானம் நிலவ மேற்கொள்ளும் எமது முயற்சிகளை எவர் குழப்பினாலும் கைவிடப் போவதில்லை. நாம் துணிச்சலுடன் தொழிலாளரின் சக்தியைப் பயன்படுத்தி சமாதான முறையில் வடக்கு கிழக்கு பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர இறுதி வரை செயல்படுவோம்.

இவ்வாறு கொட்டகல பொது மைதானத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதின கூட்டத்தில் இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் உரையாற்றும் போது தெரிவித்தார்.

# மன்னார் மக்கள் இடம்பெயர்வு மடு முகாமில் இட நெருக்கடி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து மடு அகதி முகாமிற்கு சென்றுள்ளனர். இதனால் மன்னார் அகதி முகாமில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கு வசிக்கும் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றமை தெரிந்ததே. இவ்வாறு இடம் பெயரும் மக்கள் மடு அகதி முகாமிறகு சென்று கொண்டிருக்கின்றனர்.

ஏற்கனவே கடும் தண்ணீர் தட்டுப்பாடு நிலவும் இவ் அகதி முகாமில் புதிய அகதிகளின் வருகை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது, அத்துடன் புதிதாக வருபவர்களுக்கு தங்குமிட வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாமையால் அவற்றையும் அவர்களே தேடிக் கொள்ள வேண்டியநிலைஏற்பட்டுள்ளது இவர்களுக்கு உணவு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதிலும் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நவீல்ட் பாடசாலையில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்படவுள்ளது. இது தொடர்பான விசேட கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு செவிப்புலன் இழந்தோர் புனர்வாழ்வு நிலையததில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்துப் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் சமுகமளிக்குமாறு இதன் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மேதின

மான பேரணிகள் பழுகாமம், பண்டாரியாவெளி, கடுக்காமுனை அம்பிலாந்துறை, மணற்பிட்டி ஆகிய கிராமங்களினூடாகச் சென்று தும்பன்கேணியில் முடிவடைந்தன. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்ட இப்பேரணியின்முடிவில் பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வெழுச்சிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் அவர்களும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர் அமைப்புப்பொறுப்பாளர்திரு. பாவேந்தர், மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு அம்பாறை-மட்டக்களப்பு துணை பொறுப்பாளர் திரு. தீசன், பிரதேசக் கல்விக் குழுப் பொறுப்பாளர் திரு. யோகா, வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பொறுப்பாளர் திரு. கௌசிக் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

### தமிழ்க்

பெற்றவர்கள் என்றும், இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழர் கொலையாகி இருப்பதாகவும் பி.பி.ஸி தெரிவித்தது.

ஒரு கிராம வாசி பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில், ஆயுதபாணிகளான முஸ்லிம்களால் தாம் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவதாகவும், தங்களுக்குப் பாதுகாப்பின்மையால் தாம் காடுகளில் தஞ்சமடைந்திருப்பதாகவும் தெரிவித்தார். ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழருக்குப் பாதுகாப்பில்லை என்பதையே இது தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது என்றார்.

### இராணுவம்

படுகிறது.

உள்ளூர் இராணுவத் தளபதிகள் தாம் எவரையும்பிடித்துச்செல்லவில்லை என மறுத்துள்ளார்கள்,,கிழக்குமாகாண இராணுவத் தளபதி தான் இது குறித்து விசாரிப்பதாகக் கூறியிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

### பல்கலை

இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன முதியோர்பல்கலைக்கழக அனுமதி, விழிப்புலன் அற்றோர் மற்றும் வலது குறைந்தோர் பல்கலைக் கழக அனுமதி தொடர்பான விளக்கங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

இந்நூலில் தரப்பட்டுள்ள விபரங்களின்படி. நாட்டிலுள்ள எட்டுப் பல்கலைக் கழகங்கள் உட்பட வேறு உயர் கல்வி நிலையங்களிலும் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம்.

திறந்த பல்கலைக்கழகம், சுதேச வைத்தியக் கல்லூரி, நுண்கலைக் கல்லூரி, தொழிலாளர் கல்வி நிறுவனம், கம்பியூட்டர் தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களிலும் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம் என்று பல்கலைக் கழகங்கள் மானியக் குழு இந்த நூலில் தெரியப்படுத்தியுள்ளது.

## நஜிபுல்லாவிற்கு பொது மன்னிப்பு

ஆப்கானிஸ்தானில் பதவி இறக்கப்பட்ட முன்னாள் அதிபர் நஜிபுல்லா விற்கும் பொது மன்னிப்பு வழங்க ஆப்கானில் ஆட்சி அமைத்துள்ள இடைக்காலசபைமுடிவுசெய் துள்ளது.

### தமிழிசை

கள் பலரின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த புதுவை இரத்தினதுரை, தேவர், பரா, ஸ்ரனிஸ்மாஸ்ரர்,கம்பன் கழகஅமைப்பாளர் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டுஉரைநிகழ்த்தினர்.

### முஸ்லிம்

ங்கம் தெரிவித்திருந்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அதே வேளை முஸ்லிம் காடையர்களின் அடாவடித் தனங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இந் நிலையில் தற்பொழுது நெருக்கடி மேலும் தீவிரமாகியுள்ளதனால் தமிழ் மக்கள் வெளியில் நடமாட அச்சத்தினால், வீடுகளுக்குள்ளேயே முடங்கிப் போயுள்ளனர். முஸ்லிம் கிராமங்களை அண்டியுள்ள கிராமங்களில் உள்ள தமிழ் மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறி அண்மையிலுள்ள காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

### மண்ணின்

களியாட்டமுமல்ல எமது இன்றைய விடுதலைப் போராட்டத்தை ஆளுமைப்படுத்தித் தரவேண்டிய பொறுப்பு கலைஞர்களுடையதாகும்.

இந்த மண் விடுபடும் போது இங்குள்ள திண்மங்கள், திரவங்கள், கலை, பண்பாடுகள் அனைத்தும் அப்படியே அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

இந்த நல்லூர் வடக்கு வீதியிலே இந்ததமிழிசை விழாவை நாம் நடத்தியதன்மூலம் திலீபனின் கனவுகளில் ஒன்று நனவாக்கப்படுகிறது. இதன் மூலம் திலீபனின் ஆத்மா சாந்தி அடையும் என எண்ணிப் பெருமை கொள்கிறேன். ஏனெனில் இப்படியானவிழாக்களை நடாத்த வேண்டும் என திலீபன் அன்று விரும்பினான். மண்ணின் விடுதலை என்பது வெறும் எல்லைகள் போடுவது அல்ல, அன்னியனிடமிருந்து பிரிவதும் அல்ல என்றார். (ச)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.